அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
இணை இயக்குநர் (கல்வி)
புதுச்சேரி.

ந.க.எண்.125746 /பி1 / 2021 நாள் : 19.08.2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2021 – அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) அனைத்துப் பள்ளிகளும் – ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுறுரைகள் – தொடர்பாக

பார்வை ஆரசாணை (நிலை) எண்.14 நாள்.29.01.2018.

******

2020–2021–ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று அனைத்துப் பள்ளிகளும் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள **User-id. Password—ஐ** கொண்டு ஆன்லைன் வழியாகவே **23.08.2021 முதல் 31.08.02021 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வருகிற **23.08.2021 அன்று காலை 11.00 மணிக்கு** அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க அனைத்துப் பள்ளிகளுக்கும் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன், அனைத்துப் பள்ளிகளிலும் முன்னேற்பாடுகள் சரிவர செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

நகல்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்